**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 08.04.2024**

**Case No : CC 21 / 2019**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** சண்முககனி | **Caste:** |
| **Father / Husband Name:** அரிராம் | **Calling:** |
| **Village:** அறிவான்மொழி | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 70** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 08.04.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் அறிவான்மொழியில் குடியிருந்து வீட்டில் இருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். என் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். எனக்கு 3 சென்டில் இடம் உள்ளது. அந்த இடத்தை திரவியம் நாடார் எழுதிக்கேட்டார். நான் கொடுக்கவில்லை. அந்த இடத்தில் அவர் கக்கூஸ் கட்டியுள்ளார். கடந்த 2017 ம் ஆண்டு காலை 6.00 மணியளவில் நான் வாசலில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த திரவியம் நாடார் மகன் அவர் மகள் முத்துசெல்வியும் கையில் வைத்திருந்த உடை கம்பு மற்றும் உலக்கையால் என்னை கை மற்றும் உடம்பில் அடித்தார்கள். அதனால் எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. நான் சத்தம்போட்டவுடன் என் தங்கை மகள் அன்னலட்சுமி ஓடி வந்தார். உடனே எதிரி முத்து செல்வி கையில் வைத்திருந்த மிளகாய் பொடியை என் முகத்தில் எறிந்துவிட்டார். போகும்போது திரவியம்நாடார் உன்னைக்கொன்று பாத்ரூமில் புதைத்து விடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். காயம்பட்ட என்னை அன்னலெட்சுமி சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு 7, 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> இல்லை.

Taken down by me in the open

court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII  Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 08.04.2024**

**Case No : CC 21 / 2019**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** அன்னலெட்சுமி | **Caste:** |
| **Father / Husband Name:** மகாராஜா | **Calling:** |
| **Village:** பனைவிளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 38** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 08.04.2024**

முதல் விசாரணை:

நான் பனைவிளையில் குடியிருந்து பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். என் பெரியம்மா ஆவார். எதிரிகளை தெரியும். என் பெரியம்மாவின் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். கடந்த 2017 ம் வருடம் காலை 6.00 மணியளவில் நான் வீட்டு வாசலை பெருக்கிக் கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் என் பெரியம்மாவை கம்பால் அடித்துக் கொண்டிருந்தார்கள். நான் உடனே சத்தம்போட்டு விலக்கி விட்டேன். அப்போது எதிரி முத்துசெல்வி மிளகாய் பொடியை அ.சா.1 ன் கண்ணில் வீசினார். எதிரிகள் போகும்போது அ.சா.1 ஐ பார்த்து கொன்றுவிடுவேன் என மிரட்டிவிட்டு சென்றார்கள். காயம்பட்ட அ.சா.1 ஐ நான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் என் பெரியம்மாவிடம் விசாரித்தபோது என் பெரியம்மாவுக்கு சொந்தமான இடத்தை 1ம் எதிரி எழுதி கேட்டு என் பெரியம்மா மறுத்ததால் அவரை தாக்கியதாக கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.